மதிப்பு ரூ. 908·26. பொருள்களை விற்றுவந்த விவரம் இல்லை. இரண்டு வகைத் திட்டங்களின் கீழ் வந்த பொருள்கள் மட்டும் ஏலம் விடப்பட்டிருக்கின்றன.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஐயா, இந்தப் பொருள்கள் விற்பதிலே அங்கிருக்கக்கூடிய இன்ஸ்பெக்டர்கள் "மிஸ்யூஸ்" பண்ணினார்கள் என்ற புகார் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி எவ்வித புகாரும் வரவில்லை. அதுபற்றி கனம் உறுப்பினர் சுட்டிக்காட்டினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* 399வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) நாகபட்டினத்தில் சர்க்கார் நடத்தும் தொழிற்பயிற்சி பள்ளியில் கடந்த இரண்டாண்டுகளாக, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே தகராறுகள் காரணமாக முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் என்றால் அதனை ஒழுங்குபடுத்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆசிரியர் மாணவர்களிடையே சச்சரவு இருந்தது உண்மை. ஆனால் பள்ளியில் பயிற்சி பாதிக்கப்படவில்லை.

(இ) சச்சரவு பற்றி விசாரணை செய்யப்பட்டு, ஒழுங்கை நிலைநாட்ட சில ஆசிரியர்கள் வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

அமைச்சர்களின் இல்லங்களுக்கு மராமத்து.

* 400 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கனம் முதல் அமைச்சர், கனம் பொதுப்பணித் துறை அமைச்சர், கனம் அரிஜன நலத்துறை அமைச்சர் ஆகியோர் இல்லங்களுக்கு கட்டடம் மற்றும் வசதிகள் செய்வதற்கு அரசாங்கத்தினால் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சபை முன் ஒரு விவர அறிக்கை a வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : On a point of order, Sir. A similar question was answered yesterday in the Upper House. Whether it is Lok Sabha or Rajya Sabha or Lower House or Upper House, the normal convention is that, when an answer is ready, it should first be placed before the Lower House. Obviously the answer was ready long ago. It should be placed here first and then only it should be placed in the Upper House. That has been the convention. I wish to draw the attention of the Chair to it.

MR. SPEAKER : As the Hon. Member has drawn the attention of the Chair, I would ask him to leave it at that, because the listing of the questions is the responsibility of the Chair and not of the Minister.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிட வேலைகளைச் செய்வதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் அரசாங்கஅதிகாரிகள் பயன்படுத்தப்பட்டார்களா ? அப்படி அவர்கள் உபயோகப்படுத்தப்பட்டிருந்

a 664–668-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.